REGD No. M. 4542

# திராவிட நாடு

விலை அணு 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 30—3—52 | இதழ் 39

# "ஆரிய மாயை" தீர்ப்பு

[ சி. என். ஏ. ]

...டிபட்டு விட்டான் அந்த அக்...க்காரன்"

...ட்டு விடுவார்களா இப்படிப்...வனே!"

...ண்ணை மூடிக்கொண்டிருக்கி...ள்—என்று எண்ணிக் கொண்...தான். இப்போது தெரியும், ...டிப்பட்டவர்கள் நாட்டை ...கிறார்கள் என்று"

...ஆமாம்! இவ்விதமானவர்களைப் ...த்துத் தண்டிக்காமலிருந்தால், ...க்கும் தலைக்கிறுக்கு ஏறிவிடும். ... வருகிறவிதமாகத் தண்டனை ...வண்டும் பச்சைப் பயிரை ...க்கும் மாடு கண்டால் கம்போ ...லோ, ஏது கிடைக்கிறதோ ...தக் கொண்டு தாக்கித் துரத்தா ...டால், பயிர் ஏது!"

...அதிலும் இவன் செய்த குற்... எப்படிப்பட்டது தெரியுமா? ...ர் பருகிட உபயோகமாகும் ...க்குளத்திலே விஷக்கிருமிகளைக் ...துவிட்டான்."

...படுபாவி! என்ன நெஞ்சழுத்த...ா இவனுக்கு"

...யாருக்குத் தெரியப்போகிறது ...ற எண்ணம்."

...விஷக்கிருமி கலந்த தண்ணீ... பருகி மக்கள், எவ்வளவு கஷ்...படுவார்கள்"

...மக்களுக்கு, ஒருவிதமான புதிய ...அல்லவா கண்டுவிட்டது".

"என்ன நோய்?"

"என்ன நோய் என்று பெயரிடுவது. அந்த அக்கிரமக்காரன் செய்த காரியத்தால், மக்கள் மனதிலே ஒருவிதமான கொதிப்பு நோய்! கோபம்! எதையும் சட்டை செய்யாத தன்மை! எவருக்கும் அடங்க மறுக்கும் போக்கு! இது என்ன, அது எப்படி என்று எதற்கு எடுத்தாலும் கேள்விகேட்கும் துடுக்குத்தனம்! புருவத்தை நெறிப்பது! புன்னகை புரிந்தபடி புதுப்புது கேள்விபோடுவது! இப்படி. மாறிவிட்டார்கள் அந்த மக்கள்."

"புதியநோயின் காரணமாக...!"

"ஆமாம்! சூட்சமம் தெரியவில்லை நெடுநாளாக......"

"அப்படியானல் அந்தப் பாதகன் பொதுக்குளத்திலே விஷக்கிருமிகளைக் கலக்கியது, இப்போதல்லவா?"

"இல்லை, இல்லை, அவன் அந்தக் காரியம் செய்து, வருஷம் ஐந்து ஆறு இருக்கும்"

"அவ்வளவு நாள் பொறுத்துக் கண்டு பிடித்தார்கள்"

"ஆமாம். இவ்வளவு நாளாகிவிட்டதே இனியார் இதைக்கண்டு பிடித்து நம்மைக் கண்டிக்கப்போகிறார்கள், தண்டிக்கப் போகிறார்கள், என்று எண்ணிக் கொண்டான்"

"ஏமாளி! நாடாள்பவர்களின் போக்கு தெரியாதவன்."

"திடீரென்று ஒரு நாள், பிடி பயலை! என்று உத்திரவு பிறந்தது —விழித்தான் — அடைத்தார்கள் கூண்டில் — வழக்கு நடைபெற்றது —நான் விஷக்கிருமியைக் கலக்கவில்லை, பொதுக்குளத்திலே பாசியும் தூசியும் படிந்துகிடந்தது, அதைத்தான் அப்புறப்படுத்தினேன் என்று வாதாடினான். நாடாள்பவர்களா இதற்கு ஏமாறுவார்கள்! திருக்குளத்துத் தண்ணீரில் விஷக்கிருமிகள் இருப்பதை ஆராய்ச்சி மூலம் எடுத்துக்காட்டினார்கள்."

"பலே! திறமையானவர்களல்லவா நாடாள்கிறார்கள். இவன் தந்திரமாகத்தப்பித்துக் கொள்ளப் பார்த்தால், முடியுமா?"

"உள்ளே தள்ளிவிட்டார்கள்"

"வேண்டியதுதான் — வேண்டியதுதான்"

"ஊராருக்கும் அறிவித்து விட்டார்கள், பொதுக்குளத்திலே விஷக்கிருமி கலந்துவிட்டிருப்பதை"

"சரியான வேலை செய்தார்கள். இவ்வளவு திறமையாக வேலைசெய்தால்தானே, ஆட்சி இலட்சணமாக இருக்கும்"

"ஆட்சி இலட்சணமாக இருந்தால்தானே மக்கள் சபிட்சமாக இருப்பார்கள்."

"மக்கள் சுபீட்சமாக இருக்க வேண்டுமானால், விஷக் கிருமிகளைப் பொதுக்குளத்திலே கலக்கிவிடும் காதகர்கள், பிடிபட்டாகத்தானே வேண்டும்"

"பிடிபட்டுவிட்டான் அக்கிரமக் காரன்"

* * *

அவன், பொதுக் குளத்திலே, பாசியும் தூசியும் குவிந்துவிட்டதாலே, தண்ணீர் கெட்டவாடை அடிப்பது தெரிந்து, மக்களுக்கு 'இதம்' செய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்தாலே தூண்டப்பட்டு பாசியையும் தூசியையும் அப்புறப் படுத்திவந்தான். ஆழமான குளமப்பா, படிக்கட்டுகள்கூட வழுக்கலாக இருக்கும் ஆபத்து நேரிட்டுவிடப்போகிறது, என்று கூட நண்பர்கள் எச்சரித்தனர், அவனோ, கடமையைச் செய்யத்தானே வேண்டும் என்றான் — செய்து கொண்டு வந்தான்! ஓராண்டு ஈராண்டல்ல, ஆறாண்டுகளாக! ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, திடீரென நாடாள்வோரிடமிருந்து தாக்கீது புறப்பட்டது, "நாசகாலனே! நமது ராஜ்யத்திலே, பொதுக் குளத்திலே விஷக்கிருமிகளைக் கலந்துவிட்டிருக்கிறாய், இந்த மாபெரும் குற்றத்துக்காக 'தண்டிக்கப் போகிறோம்'' என்று.

அவன் திடுக்கிட்டுப் போனான். விஷக்கிருமிகள், குளத்திலே இருப்பது தெரிந்துதான், நான் அந்தக் கிருமிகள் உற்பத்தியாவதற்குக் காரணமாக உள்ள அழுக்குகளை அப்புறப்படுத்துகிறேன்—இதற்காக, பாராட்டவேண்டாம் என்னை, ஏனென்றால் நான் பூபாலனல்ல சீமானல்ல, சாமான்யன் ஆனால் இதற்காகத் தண்டனையா! இதென்ன விதமான ஆட்சி ஐயா!! —என்று கேட்டான். சிறையின் உள்ளே போட்டுப் பூட்டினார்கள். அக்கிரமக்காரன்பிடிபட்டான்என்று ஆட்சியாளர்களின் ஆதரவாளர்கள் முழக்கமிட்டனர். இந்த ஆட்சியிலே இப்படிப்பட்ட பேர்களைப் [illegible] என்று எச்சரித்தனர். [redacted] ராரில் பெரும்பாலோர், நமக்கென்ன தெரியும்—நாடாள்பவர்கள் காரணமில்லாமலா தண்டிப்பார்கள் — என்று பேசிக் கொண்டனர். ஆட்சியாளரின் ஆதரவாளர்கள், விஷக்கிருமி கலந்தான் விபரீத புத்திக்காரன், விட்டுவைக்கலாமா இப்படிப்பட்டவனை' என்று கேட்டனர். ஆட்சியாளர் செய்தது நியாயம் என்று நிலைநாட்டப்பட்டது. அவன்சிறையிலே!!

* * *

ஏ! கைதி! உன்னைத்தான்—என்ன உறக்கமா? எழுந்திரு, எழுந்திரு, புறப்படு, புறப்படு—என்றார்கள் சிறைக் காவலர்.

"எங்கே?" என்று கேட்டான் கைதி.

"ஊருக்கு—வீட்டுக்கு—விடுதலை உனக்கு" என்றனர்.

"எனக்கா! ஏன்?" என்றான் கைதி.

"ஏன்! என்ன கேள்வி கேட்கிறாய், போ என்றால் போவாயா, ஏனாம், ஏன்! போ—போ! என்றனர். வெளியே சென்றான்.

பிறகோர் நாள், அவன் களஞ்சியத்திலே இருந்த கம்பு வரகு தானியத்தை ஆட்சியாளர்கள் எடுத்துச் சென்றனர்—அபராதத் தொகைக்கு ஈடு என்று! அதுவும் போச்சுதா என்று அவன் அபராதப்பட்டான்.

விஷக்கிருமியைக் குடி தண்
கலக்க குற்றம் இலேசானதா?
வந்தார்கள், உள்ளே தானே
வார்கள், உல்லாசமாக இரு
விட்டு வந்துவிடலாம் என்று
எண்ணிக் கொண்டான். ஆ
தார்கள் அசகாயச்சூரர்கள
ஆளை வெளியே போகச் செ
விட்டு, களஞ்சியத்திலே இ
தானியத்தை எடுத்துக்கொ
வந்துவிட்டார்கள். சோண
போலாகிவிட்டான் பயல்!—எ
இதையும் கீர்த்தனமாக்கிப்பாடு
கள், ஆளவந்தார்களின் தாளந்
கள்.

* * *

நாட்கள் பல சென்றன—ம
கள் பல சென்
நாட்டிலே உள்ள ந
றங்கூறுமன்றம் கூடி
—பொதுக் குளத்
விஷக்கிருமி தூவவி
தூவியதாகக் குற்
சாட்டியது தவறு,
டனை தந்தது ம
தவறு, விடுதலை செ
என்று தீர்ப்பளித்
குற்றம் செய்யவில்
நல்லறங் கூறுமன்
தீர்ப்பளிக்கிற
அவனோ, தண்டனை
ஓராளவு அனுபவி
மாகிவிட்டது! அ
விஷக்கிருமிகளைத்
விட்டான் என்
ஆதாரமற்றது— தீ
ஆட்சியாளரோ,
ருக்கு உரத்த குரலி
அறிவித்தது, இ
அக்கிரமக்காரன், பொதுக் கு
திலே விஷக் கிருமிகளைக் கல
னான், என்பது! ஆட்சிக்குப் ப
தாங்கிகளும், பராக்குக் கூறு
ரும், ஆமாம் ஆமாம் என்றனர்!
பிடிகள் கொக்கரித்தன! அறங்
மன்றம் கூறுகிறது அவன் கு
மற்றவன், என்று! அவனோ,
யாத குற்றத்துக்காகச் சிறை
தள்ளப்பட்டுக் கிடந்தான்—வா
பறித்துச் சென்றனர்.

* * *

எந்த அநியாயபுரி 'ராஜ்யத்
கதை இது என்கிறீர்களா! எல்
நம்ம ராம ராஜ்யத்துக் கதைதா
சென்னை மாகாணத்திலே சி

## 6–4–52ல் பொதுக்குழு கூட்டம்

அன்புடையீர்,

வணக்கம். மாநில மாநாடு முடிந்து, தி. மு. க. வின் முதல் பொதுக்குழுக் கூட்டம் 6–4–52 ஞாயிறு காலை 10-மணிக்கு ஈரோடு எஸ். ஆர். சந்தானம் மண்டியில் நடைபெறும். அவ்வமயம் கழக சம்பந்தமான வேலைகள் குறித்தும், கழக சட்டதிட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கான முறைகள் பற்றியும், மாநில மாநாட்டுக் கணக்குவகை பற்றியும் கழக தினத்தாள் குறித்தும் கலந்து பேசப்படும். பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. வரத்தவறியிருந்தாலும், இதையே அழைப்பாக ஏற்று கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்,

**அண்ணாதுரை**

ும் பெற்று செங்கோல் த்திவரும் கதருடையார் ஆட்சி தான்!!

43ல் குற்றம் செய்தான் 1949ல் வழக்கு, 1952ல், ரமிலே விடுதலை செய்க, உயர்நீதிமன்றத் தீர்ப்பு!!

* * *

ான் 'விடுதலை' செய்யப்பட்டு டேன்! உண்மைதான், நண்பர் ! சென்னை உயர்நீதிமன்றம், குற்றமற்றவன் என்று தீர்ப் த்துவிட்டது, விடுதலை செய்யு கூறிவிட்டது. விடுதலை டத்துவிட்டது.

ஆரியமாயை'' என்ற ஏடு எழுதி ன, நாடாளும் நல்லோர்கள், த ஏடு மக்கள் மனதிலே வகுப் துவேஷத்தைப் புகுத்துகிறது று கண்டுபிடித்தனர்!! 1943ல், ாவிட நாடு' இதழிலே பல கட் ரகள், இந்நாட்டு நிலையை விளக் ம், ஜாதி பேதம், இவைகளால் டாகும் கேடுகள், இவை ஏற் க் காரணம், இவை களையப்பட ண்டியதன் அவசியம், இவை விளக்கி "ஆரிய மாயை" ற தலைப்பிலே பல கட்டுரைகள் டினேன்—இது புத்தக வடிவாக ளி வந்தது—என் அனுமதி ன் தான்!—இந்த ஏடு, நாட் லே நச்சுக் கருத்துக்களைப் பரப்பு து என்று கண்டறிந்த கதருடை ர், 1949ல் என்மீது வழக்குத் ாடுத்தனர் — தண்டித்தனர் — ற சென்றேன்.

பொதுக் குளத்திலே விஷக் ருமிகளைக் கலந்த குற்றவாளிக்கு ப்பாக, என்னைச் சித்தரித்தனர் ளவந்தார்களின் ஆதரவாளர்கள்! ாது மக்கள் மனதிலே வகுப்புத் வேஷம்' குறிப்பிட்டுக் கூற வண்டுமானால், 'பிராமணத் துவே ம்' ஏற்படுகிறது 'ஆரிய மாயை' லம், ஆகவே 153வது செக்ஷன் நான் குற்றவாளி, என்று கூறி ர் காங்கிரசாட்சியினர், நான் ண்டிக்கப்பட்டது, முறையான சயல்தான், நாட்டிலே கேடு பரவா ருக்க இத்தகைய நடவடிக்கையை ல்லறிவு படைத்த 'சர்க்கார்' எடுக் த்தான் வேண்டும், என்று பேசி னர். மட்டரகங்கள் ஏசவும் செய்தன!

Filmed as bound.

சர்க்கார், எல்லா வகுப்புகளுக்கும் பொதுவானது — இந்த நிலையிலே ஒரு வகுப்பின் மீது மற்றோர் வகுப்பு துவேஷம் மூட்டுவது, சகிக்க முடியாத குற்றம், என்று சட்டத்தைக் கட்டி அணைத்தபடியும் சிலர் பேசினர். புத்தகத்தை வெளியிட்டவருக்கு 500 ரூபாய் அபராதம்—எனக்கு 700! கட்ட மறுத்தேன், சிறையில் தள்ளினர். பத்து நாட்களில் வெளியே துரத்தினர். சென்னையில் அலுவலகத்திலே இருந்த காகிதக் கட்டுகளை தூக்கிச் சென்று, 'கடை வைத்து' விற்றுப் பணமாக்கிக் கொண்டனர்—700 கிடைத்துவிட்டது ஆளவந்தார்களுக்கு!

சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்து, ஆரிய மாயை எனும் ஏடினைத் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்து, அதிலே வகுப்புத் துவேஷம் ஊட்டும் பகுதிகள் இருப்பது நிச்சயமாகத் தெரிந்து, வழக்குத் தொடுத்தனர், சர்க்கார் — இதிலே தவறு என்ன? இதற்கு ஏன் குய்யோ முறையோ என்று கூவுகிறார்கள் இந்த கோணற்புத்திக்காரர்கள், என்று கொக்கரித்தனர், கொடி தாங்கிகள்! ஆர அமர யோசிக்காமல் அன்னை பாரதமாதாவின் அருமருந்தன்ன பிள்ளைகள், வழக்குத் தொடுக்கமாட்டார்கள், வம்புக்கு இழுக்கமாட்டார்கள், என்று பேசினர் சிந்துபாடிச் சொந்த இலாபம் தேடிடும் சிலர்கள். சர்க்கார் ஒரு எழுத்தாளன் மீது, வழக்கு தொடருவது என்றால், உண்மையிலேயே மிக மிக யோசனைக்குப் பிறகே, வழக்குத் தொடர வேண்டும்.

முருகன் மீது எப்படியாவது ஒரு வழக்குத் தொடுக்கவேண்டும் என்பது கந்தனின் ஆவல்—கந்தன், நண்பன் சோமனிடம் யோசனை கேட்கிறான் — சோமன் ஒரு அடாவடிப் பேர்வழி—"இதற்கென்ன கந்தா! என் வீட்டுக் காளையை முருகன் தன் வீட்டுத் தொழுவத்திலே கட்டி வைத்து மூன்று படி பாலைக் கறந்தெடுத்துக் கொண்டான்" என்று வழக்கு போட்டால் போகிறது என்று யோசனை கூறினால் கந்தன், சர்வ சூன்யனாக இருந்தால்கூட "ஏனடா சோமா! என்னை இழிவுபடுத்தவா யோசனை சொல்கிறாய். காளை பால்கறந்தது என்று கூறினால் என்னையல்லவா, அடிமுட்டாள் என்று சொல்வார்கள்." என்று கேட்கமாட்டானா! என்மீது தொடரப்பட்ட வழக்கோ, கந்தன், முருகன் போன்றருடையதல்ல. சர்க்கார்வாதி! நான் பிரதிவாதி! சர்வவல்லமை பொருந்திய சர்க்கார் அதன் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடக்கும் பொறுப்புள்ள ஒரு 'பிரஜை'மீது தொடுக்கும் வழக்கு! இதிலே, காளைமாடு பால் கறந்தது' என்ற போக்கு, இருக்கலாமா, கடுகளவாவது! இருக்கிறதே, கடுகளவா, கண்டவர் கைகொட்டிச்சிரிக்கும் அளவுக்கு! இரண்டு நீதிபதிகள் உட்கார்ந்து, கூறுகிறார்கள், 'ஆரியமாயை'யில் வகுப்புத் துவேஷம் இல்லை, என்று—ஆனால், எண்ண, எழுத, சர்வ சுதந்திரம் வழங்கிடும். எழிலரசு அமைத்து இருக்கும் காங்கிரஸ் சர்க்கார், காளை மாட்டுப் பாலைக் கறந்தெடுத்துக் கொண்டேன், என்று வழக்குப் போடக்கூசும் கந்தனைவிட, அவசர அவசரமாக, ஆலோசனையற்று, என் மீது வகுப்புத்துவேஷக் குற்றம் சாட்டிற்று — நான் தண்டனையையும் ஓரளவுக்கு அனுபவித்தேன். இலட்சணம் எப்படி இருக்கிறது!!

நாடாளும் சர்க்கார், ஒரு 'குடிமகன்'மீது வழக்குத் தொடருவது

11-ம் பக்கம் பார்க்க

---

ஆசிரியருக்கு...

## இந்திக்கு ஆதிக்கம்?

ஐயா,

அரசியலார் இந்தியை விருப்ப பாடமாகவைத்திருந்தும், 'எங்கள் பள்ளியில் மட்டும் அந்த முறை அமுல் நடத்தப்படவில்லை. 'ஒருசிலரின்' ஆதிக்கமே காரணமாகும். நான்காம்படிவ மாணவர்கள் ஒவ்வொருவரும் இந்தியைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு பெயர் என்ன? இந்தியை கட்டாயமாக்கி வலியுறுத்தும் இவர்களைப் பற்றி சர்க்கார் கவனிக்காதது ஏன்? இனியாவது, ஆட்சிபீடம், தக்க நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்க்கிறோம்.

மானாமதுரை | ஏ. வெ. செ.
19—3—52 | உயர்நிலைப்பள்ளி

# 'கீழ்ப்பாக்கம்' அலறுகிறார்!

[அண்ணல்]

தாய், நோயால் படுத்தபடுக்கையானாள். தனயனோ ஏழை! டாக்டரோ, மருந்து வாங்கித்தரச் சொல்கிறார். கையில் பணமில்லாதது கண்டு கலங்குகிறான் — கண்களிலே நீர் வருகிறது! தாயைப் பார்க்கிறான் — நெஞ்சு கொதிக்கிறது. ஒருபக்கம் மருந்து! மற்றோர் பக்கம் ஏழ்மை!! — அவன் விழிக்கிறான். தாய்ப்பாசம் தனயனைத் தள்ளுகிறது. கொஞ்ச ரூபாய்கள் போதும், அந்த மருந்து வாங்க. ஆனால் ஏது அவனுக்கு! கடைக்குச் செல்கிறான், மருந்துகள் விதவிதமாக அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. காரும் கனவான்களும் வருகிறார்கள்—போகிறார்கள். அவனோ கண்ணீரோடு நிற்கிறான்! 'தாய் இறந்து விடுவார்களோ—இந்தமருநது கொடுக்காவிட்டால்?' —மனிதன்தானே அவனும்! கலங்குகிறான்!! சுற்று முற்றும் பார்க்கிறான். அவன் கை, மருந்துபாட்டிலைத் தொடுகிறது. கடைக்காரர் பிடித்துவிடுகிறார். போலீசார் வருகின்றனர். கூண்டிலே நிறுத்தப்படுகிறான். சிறைக்குள் தள்ளப்படுகிறான். "அய்யா! அய்யா!! என் அம்மாவைப் பாத்துட்டு வந்துடறேனய்யா—கொஞ்சம் விடுங்கய்யா!" —அவன் குரல், அலறுகிறது. ஆனால் சிறைக்கதவு சாத்தப்படுகிறது!

★

ஏழைக்கு ஏது இன்பம்?—பாரில்
பணமில்லேன்னா
வாழ்க்கையே துன்பம்!
என்ன உலகமடா! ஏழைக்கே
நரகமடா!
தன்னலப் பேய்களுக்கே
தங்கச் சுரங்கமடா!
எப்படி வாழ்வேன்—இனிமேல்?

★

"தத்ரூபமா எடுத்திருக்கான், பிரதர்! மாடிவீட்டைக் காட்டிட்டு சந்தியிலே கிடக்கும் குடும்பங்களைக் காட்டறதும், [illegible] ஓடும் மனிதனைக் காட்டிட்டு சீட்டாடிக் [illegible] போரைக் காட்டியதும் ரொம்ப பிரமாதம்!"

"பாத்தீங்களா! பாவம்—அந்தப் பிள்ளை அனியாயமா, திருடனாச்சு. அந்த அம்மா என்ன கதி ஆனாங்களோ?"

"வேதாசலமுதலியார் படுத்தின பாட்டைப் பார்த்தியோ — பாவம் மாக்கிளையிலே பிணமானான் அந்த ஏழை!"

★

இந்தக் காட்சிகள், கடந்த சில வாரங்களாக, கீழ்ப்பாக்கம் நண்பரின் கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன. 'சீசன் சரக்கு!' விற்பதில், சாமர்த்தியமும் தந்திரமும் பெற்றவர் நண்பர் 'கல்கி'. அடிக்கடி இதுபோல எழுதுவதும், அதற்கு யாராவது மறுப்பெழுதினால் அதைக் காரசாரமாக்கிப் பத்திரிகைப் பயணத்தை நடத்திச் செல்வதிலும் பேனாபிடித்த நாள்முதல், ஆசை கொண்டவர் அவர். ராஜாஜியைப் பற்றி எழுதி, சர்ச்சையிழுப்பார்—'தியாகபூமி' படத்தைப்பற்றி கண்டித்தோருக்கு 'படலம் படலம்' ஆகப் பதில் தருவார். திடீரென, 'டப்பா' சங்கீதம் என்று பாய்வார்! கோகிலகானக் குரல் கேட்டால் 'மீராவைப் போலுண்டோ மேதினி மீதில்!' என்று படங்களோடு, தனிமலர், போடுவார். தன்னை எவருமே அழைப்பதில்லை யென்ற ஆத்திர உணர்ச்சி தலையெடுக்கும்போது 'மோசம் — இந்த சினிமாக்கள்' என்று மூச்சு விடுவார். 'கள்வனின் காதலி'யைப் பார்ப்பார்-கவலைபெருகும்! இத்தகையஎழுத்தாளர், அவர். அவரது இதயத்தில் இப்போது, ஏழைகளைப்பற்றிப படம்பிடிப்போர், நடமாடத் துவங்கியிருக்கிறார்கள். சீறு சீறென்று சீறுகிறார்! முன்னுக்குப்பின் முரண்பட—அது தானே அவர் திறமை! — எழுதிக் கொட்டுகிறார்!! இப்போதெல்லாம் படம் எடுப்போர், "ஏழைகளின் கஷ்டங்களையும் தொழிலாளர்களின் துயரங்களையுமே காட்டுகிறார் [illegible]

காரர்களின் கொடுரங்களைப்
காரசாரமான பேச்சுக்க
நிகழ்ச்சிகளையும் புகுத்துகி
ளாம்" இந்த நாட்டின் புகழை
கெடுப்பதாகிறதாம்! கல்கி க
றார். இதுபோல ஏழைகளின்
டங்களையே காட்டுவதால், "ம
எல்லாம் உழைப்பையே வெ
குப்படியாகச் செய்கிறார்களாம்!
"உழைப்பவன் உழைப்பி
உயர்ந்து நல்ல நிலைமைக்கு
வதை நம் நாட்டுப் படங்க
பார்க்கமுடிவதில்லையாம்" —
முறையின் மூலம், "பணக்
மீது துவேஷத்தை உண்டுபண்
கிறார்களாம்!"

★

பால் ராப்சன் என்றொரு பி
பாடகர். அவரது இசை கே
மகிழாதார் கிடையாது, அ
காவில் அவ்வளவு பிரசித்தி வ
தவர்! ஆனால், அவரது இசை
சிகள் நடைபெறாமல் தடுப்பதி
கவலையும் கருத்துங்கொண்டு,
கம் விளைவிப்பதும் கலாட்டா
வதுமாக இருக்கிறார்கள்—அ
காவில். காரணம் அவர் ஒரு நீ
'அடிமை ஆண்டான்' பே
குறித்து அவர் பாடுகிறா
வீழ்ந்துபோன தன் மக்களின்
குறித்து அவர் பாடுபடுவது—
பத்யக்காரர்களுக்குப் பிடிக்கவி
தடுக்கிறார்கள்! கலாட்டாசெய்
கள்!! இதைப்போலவே சி
உலகில் பிரசித்திபெற்ற ச
சாப்ளினுக்கும் ஏற்பட்டிருக்கி
அவர் ஒரு சிறந்த நகைச்சுவை
னர்! அவரது உள்ளத்தில், ஐச
நாடெனப் போற்றப்பட்ட
அமெரிக்காவில் ஏழைகள் ப
அல்லலும், தொழிலாளி
வேதனைகளும் தென்படலா
அதைப் போக்க, பொதுவுடை
மருந்தே, பயன்படுமெனக்
துவங்கினாராம். அதை வலியு
தும் சில படங்களைத் தாமே எ
தாராம்—இது அமெரிக்க சர்க்கா
கண்களுக்கு அவரைச் சந்தேகி
செய்திருக்கிறது! இது, அ

மையை எதிர்க்கும் நாடு—
அப்படி. 'கல்கி'யார் அமெ
வாகியிருக்கிறார் இங்கே!

* * *

லமுதல் மாலைவரை கஷ்டப்
கந்தன், செல்கிறான் திரைப்
காண. முதலாளியின் முத்தி
ர் தினசரி அவன் முதுகிலே
த் தவறுவதில்லை! ஆனாலும்,
திலே, தொழிலாளி ஒருவனை
ளி அடிக்கும்போது பரிதா
டுகிறான் — குற்றமொன்றும்
யாத போதும் கொடுமை ஏன்
டிக்கவேண்டும் என்ற கேள்வி
ம்புகிறது, அவனுக்கு? மாடி
டையும் மண்குடிசையையும்
ர நேரத்தில் காணும்போது
ன் மனதுக்குள்ளே கேள்விகள்
ம்பத்தான் செய்கின்றன!
ழைத்தேன்! வாழ முடியவில்லை''
கிற வசனங்களைக் கேட்கும்
து, அவன், தன்னைப்பார்த்தே
ஒரு தோழன் கூறுவதுபோல
ருகிறான். 'தானும்வாழப்பிறந்த
தன்' என்பதை உணர்கிறான்!
னைப்போல அடிபடும் திரைப்
ஏழையின்மேல் அவனுக்கோர்
வேற்படுகிறது — ஏழை அழும்
து அவனும் அழுகிறான்!
ழக்துவந்த தொல்லைகள் தொலை
போது மகிழ்கிறான்!!
காமிசத்யபாமா' எனக் கதவுதட்
கதைகளும், 'தாருகாவனத்து
பத்தினிகளை' கற்பழித்த சிவ
ருமான் உருவும், இன்று
ப்பப்படவில்லை மக்களால். கண்
ரனே நடைபெறும் காட்சிகளைக்
ண விரும்புகிறார்கள்! ரிக்ஷா
ழப்பவனின் வேதனை, கோயி
ல பூசாரி செய்யும் அட்ட
ம், மதவேடத்துடன் மக்களை
த்திய ராஜகுரு, இவர்களை
திர்த்து மக்களுக்காகப்
படும் நல்லவன்—ஆகியோரைக்
ணும்ஆவல் அதிகரித்திருக்கிறது
டில். வாழ்க்கையோடு போரா
மற்றொர் நண்பனைக் காண
ம்புகிறார்கள்! தமது வாழ்க்கை
ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக்
முன்னே கண்டு, அதன்மூலம்,
டமும் படிப்பினையும் பெற
ம்புகிறார்கள்! கஷ்டப் பட்ட
ழ, எப்படி கஷ்டங்களை நீக்கி
பெற்றான் என்பதை அறிய
கொண்டிருக்கிறது மக்கள்
ம்! அதனால்தான் இதுபோன்ற
படங்கள் இன்று, வெற்றிகரமாக ஓடுகின்றன. மக்களின் ஆதரவை யும் பெறுகின்றன.

இது கூடாதாம்!கூறுகிறார்,கல்கி!!

ஏழைகளைக் கேவலமாகக் காட்டுகிறார்களாம்—"ஏழைகளின் துயரங்களைக் காட்டுவதற்காக க்ஷயரோக ஆஸ்பத்திரிக்குப்போய் எலும்புந் தோலுமானநோயாளிகளைக்கஷ்டப் பட்டுப் படம் பிடித்துக் கொண்டு" வந்து காட்டுகிறார்களாம்! கூறுகிறார் அவர். கருத்துமட்டுமே பழுதுபட்டிருக்கிறதென எண்ணினோம்—'இல்லை! இல்லை!! கண்ணிற்கும் காமாலை வந்துவிட்டது' என்று தெரிவிக்கிறார், எழுத்து மூலம். பருப்பு வகைகளும், தஞ்சை அரிசியும், வித விதமான வசதிகளும் பெறும் பாக்கியம்பெற்றுள்ள' நண்பருக்கு நாட்டிலே நடமாடும் ஏழைகளின் உருவம்கூட கண்ணில் படவில்லை!

கடவுள்மீது நேரடி நடவடிக்கையெடுப்பதுபோல் — கதை எழுதுகிறார்களாம் சினிமா கதாசிரியர்கள். ஏழைகளுடைய இரத்தத்தைப் பணக்காரர்கள் உறிஞ்சுவது எப்படி என்று சினிமாத் திரைகளில் காட்டுகிறார்களாம்!—வேதனையோடுசொல்கிறார். இந்த வரிகளுக்குப் பின்னால் அவரே எழுதுகிறார், "இதே படங்களை சோபாக்களில் உட்கார்ந்து பார்த்துப் பரிதவிக்கும் பணக்காரர்கள் அந்தக்கோபத்தைக் கொட்டகைக்கு வெளியில் ஏழைப்பிச்சைக்காரர்கள்மீது காட்டுவார்கள். 'சட்! விலகிப்போ!' என்று அப்பால் தள்ளிவிட்டுப் போவார்கள். மோட்டார்களை அந்த ஏழைகள்பேரில் இடிக்காமற்போனால், அது அவர்கள் செய்த புண்ணியம்! — எப்படி இருக்கிறது இது? பணக்காரர்களுக்கு இதுபோன்ற படங்களைப்

(8-ம் பக்கம் பார்க்க)

# உறுப்பினராகுங்கள்

இன்றுவரை ஐம்பதினாயிரம் உறுப்பினர்கள் சேர்க்கவேண்டிய உறுப்பினர் ரசீது புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தலைமைநிலையத்திலிருந்து,மாவட்டச் செயலாளர்களுக்கும், குறிப்பிட்ட சில ஊர்களுக்கும் புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இங்கிருந்து நேரில் பெற்றுள்ளவர்கள் பெற்ற புத்தகங்களின் கணக்கு விவரங்களைத் தலைமை நிலையத்திற்கே அறிவிக்கவேண்டும். மேலும் புதிதாக புத்தகம் வேண்டுமென்றாலும் தலைமை நிலையத்திற்கே எழுத வேண்டுகிறோம்.

மாவட்டச் செயலாளர் மூலம் பெற்ற ரசீதுகள், மாவட்டச் செயலாளரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். அவர் தலைமை நிலையத்திற்கு, தாம் பெற்ற ரசீது புத்தகங்களுக்குரிய கணக்கு விவரம் தருவார்.

ஈரோடு பொதுக்குழு கூடுவதற்குள் எவ்வளவு உறுப்பினர்கள் அதிகம் சேர்க்கமுடியுமோ, அவ்வளவு உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுகிறோம்.

உறுப்பினர் தொகை வளர,வளர நம் உழைப்பின் பயனும் பெருகும்!

இதனை மனதில்எண்ணி பணியாற்ற வேண்டுகிறோம்.

உறுப்பினர் ரசீது புத்தகங்கள் போதவில்லை, மேலும் வேண்டும் என்று எழுகிறார்கள். ஆனால் முன்னர் பெற்ற ரசீதுகளை முடித்து அனுப்பி வைக்காது கேட்கிறார்கள். சேரச்சேர அனுப்பிக் கொண்டிருப்பதுதான் நல்லது.— அப்பொழுது வளரும் உறுப்பினர் தொகையை அறிவிக்க இயலும்.

தோழர்களே, ஈரோடு வரும் பொழுது, இதோ எங்கள் மாவட்டம் தான் உறுப்பினர் சேர்ப்பதில் தலைமை வகிக்கிறது என்று போட்டியிட்டுக் கொண்டு புள்ளி விவரம் தரும் விதமாக வர வேண்டும்.

30—3—52 வரை தலைமை நிலையத்திற்கு உறுப்பினர் புத்தகங்கள் வேண்டி எழுதியுள்ளவர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டுள்ளன. இனி புதிதாக உறுப்பினர் புத்தகம் பெற விரும்புவோர் அந்தந்த மாவட்டச் செயலாளர்களிடமே பெற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
தலைமை நிலையம்,
தி. மு. க. காஞ்சி.

திராவிடநாடு

காஞ்சி] 30—3—52 [ஞாயிறு

# கலங்கும் இலங்கை

✲

நீரலைகள் தாலாட்டும் இலங்கைத் தீவு, கண்ணீர் வெள்ளத்தால் கலங்கித் தவிக்கிறது, கடந்த 23-ந்தேதி முதல்.

எழுபது லட்சம் மக்களின் இதயங்களைக் கடலாக்கிவிட்டு, வீரர் சேனநாயகா போய்விட்டார். அலைகள் ஒலிக்கும் சமுத்திரத் தொட்டில், பெருமூச்சுப் புயலால், ஆடிக் கிடக்கிறது.

‘வானொலி’ மூலம், சிந்தை சிலிர்க்கும் செய்தியைக் கேள்வியுற்றதும், கலங்கினோம்—நம் கண்முன் மறைந்த வீரரின் கம்பீரப் பார்வையும், சிங்கத் தோற்றமும், புன்சிரிப்பு ஓடும் வதனமும் காட்சி தந்தது. இனி, காண முடியாது அவரை. தெளிவாக ஒலிக்கும், அவரது குரலை கேட்க முடியாது. சேனநாயகா சென்று விட்டார்—காலச் சிறகடிப்புக்கு விடுதலை மலர் ஒன்று, வீழ்ந்துவிட்டது.

பொதுச் சேவையின் ஆர்வத்தால் வளர்ந்து, அதிகாரம் தாங்கி, மக்களின் இதயங்களிலெல்லாம் சுடர்விட்டுக் கொண்டிருந்த ஒளி, அவர். அவரை, உலகு இழந்து விட்டது.

இலங்கைத் தீவின் மடியிலே தவழ்ந்து விளையாடிய தலைவர்களான ராமநாதன் எப். ஆர். சேனநாயகா, பெரேரா, அருணாசலம், ஜெயதிலகா, ஜெயவர்த்தனா ஆகியோருடன் கைகோர்த்துலவிய, சிறப்புறு தலைவர் — இன்று, போய்விட்டார்.

நாவலர்களும், இலக்கிய மேதைகளும் தலைமைதாங்கி நடத்திய இலங்கையின் அரசியல் வாழ்வில், பொதுமக்களின் உள்ளத்தை மட்டும் நன்கு தெரிந்து, அதற்காகத் தன்னை அர்ப்பணித்து, தலைவரான பெருமை பெற்றவர், சேனநாயகா. வளைக்கும் பேச்சுவன்மையில்லாதவர், ஆனால் தன் வாழ்வுமூலம், மக்களின் தந்தையானார். 1884-அக்டோபர் 20-ந்தேதி போத்தலை நிலச்சுவான்தாரரான, முதலியார் டொன் ஸ்பேட்டர் சேனநாயகாவின் மூன்றாவது மகனாகப் பிறந்த, சேனநாயகா, தனது 58—வது வயதில் — பூமிக்குள் போய்விட்டார். இளமையில் அவருள்ளத்தைக் கவர்ந்த முக்கிய தொழில், பூமியைப் பண்படுத்துவதும் பயிரிடுவதுமாம். மண்ணைப் போற்றியவர், மண்ணுக்குப் பரிசாகிவிட்டார்!

புரவிமீதேறி உலவச் சென்ற புத்தமதக் காவலர் எதிர்பாராத விதமாக விழுந்து, எல்லோரையும் பதைக்கவிட்டுவிட்டு, போய் விட்டார்.

சேனநாயகாமறைவு, இலங்கைக்கு ஏற்பட்ட மகத்தான நஷ்டமாகும். பல்வேறு வகுப்பினரும், பல்வேறு மதத்தினரும், சூழ்ந்துகிடக்கும் அங்கு, ‘நீதியின் ஒளி’ எனப் போற்றப்பட்டார், சேனநாயகா.

மதுவிலக்கு இயக்கத்தால் பொதுவாழ்வு புகுந்த இவர், தனது அண்ணன் எப். ஆர். சேனநாயகாவைப் பின்பற்றி, தலைவரானார். மக்களுடன், பழகும், வாய்ப்பு பெற்று இலங்கையின் மணிவிளக்காகத் திகழ்ந்தார்.

1915ம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற வகுப்புக்கலகத்தின் போது, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தால், சிறைக்குள் தள்ளப்பட்டார். சிங்களக்கிராம மக்களை துப்பாக்கிக் குண்டுகளுக்கு பிரிட்டிஷ் துரைத்தனம் இரையாக்கியதைக் கண்டு மனம் துடித்த, இவர், தன்னை பொது வாழ்வுக்காக அர்ப்பணித்துக் கொண்டார்.

அதுமுதல், தமது மக்களின் நன்மைகளுக்காகப் போராடி, அவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு ‘டொமினியன்’ அந்தஸ்து தந்து, பிரிட்டிஷார் பிரகடனம் செய்தனர். அன்று முதல் இவரே “இலங்கை” ஆனார்.

அகிலஉலகவிவகாரங்களில், அவசர முடிவுகளைக்கூறுது, தமது நாட்டின் புகழை உயர்த்திய, அறிஞர் இவர்.

இத்தகைய, வீரர் ஒருவ
இலங்கை இழந்து விட்டது—
ணுக்குள் சென்று விட்டார்.
ரது பிரிவு, ஆசியாவுக்கே ஒரு
மாகும். சேனநாயகா மறைவு
இலங்கை மட்டு மல்ல; ஆசிய
அதிர்ந்தது.

சாதாரண தொண்டு மூலம்
னேரில்லாதவராக வாழ்ந்து
ளின் “தந்தை” ஆனார். இ
பொதுவாழ்வு, இந்தபடிப்பினை
தான் தருகிறது.

கலங்கும் இலங்கைக்கு ந
கண்ணீரையும் சேர்ப்பிக்கி
காலஓட்டம், இலங்கைக்கேற்ப
“இடி”யைப் போக்கட்டும்.

புயலில் சிக்கியகலம் போ
பெருமூச்சு விடும் இலங்கை
நமது ஆழ்ந்த வருத்தத்தைத்
வித்துக்கொள்கிறோம்—அங்கு
திராவிட மக்கள் சார்பில்.

வாழ்க வீரர் புகழ்!

⊛

# நெருக்கடி

★

“திராவிட நாடு” நெருக்கடி
தாக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் ஏற்பட்டிராத
வுக்கு நெருக்கடி.

இந்த நெருக்கடி மெள்ள மெ
வளர்ந்துகொண்டே வந்தது—
போது வெளிப்படுத்தித் தீர
டிய அளவுக்கு இருக்கிறது.

‘திராவிட நாடு’ ஏஜண்டு
இதுவரை இதுபோன்ற நெரு
ஏற்பட முடியாதபடி கட
கொண்டு வந்தார்கள். சில
ளாகச் சில ஏஜண்டுகள் பா
பணத்தைக் குவியும்படிச் செ
விட்டனர். ஐயாயிரம் ரூபா
மேலாகவே நிலுவை இருக்கி
கடிதங்களுக்குப் பதில் கடித
அனுப்புகிறார்கள் — கண்டி
‘சிபார்சு’களை அனுப்புகிறார்க
பணம் வருவதில்லை.

இதனால் வளர்ந்த நெரு
இதுபோது ‘வாராவாரம்
முடிக்கக் கடைவீதி சென்ற
தம் வாங்கிவரும் நிலைமை
கொண்டுவந்து விட்டிருக்கிறது

இந்த 'நெருக்கடி' ஏற்படக் காரணமாக இருந்துவரும் ஏஜண்டுத் தோழர்கள், உடனே பணம் அனுப்பிவைத்தால்தான், இதழுக்கு வந்துள்ள ஆபத்து நீங்கும்.

அருள் கூர்ந்து, 'பாக்கி' அனுப்ப வேண்டிய 'ஏஜண்டுகள்' இந்த நிலைமையை அறியவேண்டுகிறேன்.

பல்லாயிரக்கணக்கான திராவிடர்களின் அன்புக்குப் பாத்திரமாக உள்ள திராவிடநாடு இதழ், இன்று நெருக்கடியால் தாக்கப்படுகிறது.

உடனே நெருக்கடி தீரவழிசெய்க- பாக்கிபணத்தை உடனடியாக அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு கிழமை இதழ், ஐயாயிரம் ரூபாய்க்கு மேல், வெளியில் இறைத்துவிட்டு, ஒழுங்காக வெளிவந்து கொண்டிருக்க முடியாது என்பதைப் பணம் சேரவேண்டிய ஏஜண்டுத்தோழர்கள் உணர வேண்டுகிறேன்.

நெருக்கடி, என் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டிய அளவுக்குவளர்ந்திருப்பதாலேயே, இந்த வேண்டுகோள்.

பொறுப்புணர்ச்சியுள்ள ஏஜண்டுகள் இந்த என் வேண்டுகோளுக்கிணங்க நடந்து கொள்ளவேண்டுகிறேன்.

அன்பன்
**அண்ணாதுரை.**

★

## ராயலசீமா

ஆந்திரப்பகுதியான ராயலசீமா பற்றி வரும் செய்திகள் நெஞ்சைக் கலக்குகின்றன. பட்டினிக்கொடுமையால் பரதவிக்கும் நமது ஆந்திரச் சகோதரர்களைக் கண்டு கலங்குகிறோம். வாழத்தவிக்கும் அவர்களின் பசி தீர்க்க, பஞ்சநிவாரணவேலைகள் துவக்கப்பட, பலர் முயற்சிப்பதாக அறிகிறோம்.

கடந்த 21–3–52 "ஜன சக்தி" இதழில் பஞ்சத்தை எதிர்த்துப் படை திரள்வோம் என்றொரு கட்டுரையைக் கண்டோம். இது போன்ற இன்றியமையாத ஒரு பணியில், ஜனசக்தி இதழினர் துவங்கும் முயற்சிக்கு தி. மு. கழகம் கைகொடுக்கும்.

தனித் தனி நபர்களின் சொந்த முயற்சியைவிட, முற்போக்குக் கட்சிகளின் கூட்டணியே, பலனை காரியத்தைச் செய்யமுடியும். தவிக்கும் ராயலசீமா மக்களின் துயர் துடைக்க எடுக்கப்படும் பெருமுயற்சியில், சிறிய பங்காகயிருக்க வேண்டுமென்று முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை 28-3-52 அன்று ஆந்திர கம்யூனிஸ்டு எம். எல். ஏ. வான தோழர் நாகிரெட்டிக்கு ரூ. 100 அனுப்பிவைத்துள்ளார். பாலைவனத்தில் தூவப்படும் சிறு துளியானாலும், இந்தத் தொகை வதையும் மக்களுக்கான அன்புக் காணிக்கையென்றும், பொதுச்செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

முற்போக்கெண்ணம் படைத்தோரால்மட்டுமே ஏழை யுலகுக்கான நன்மைகளைச் செய்யமுடியும் என்பது நமது கருத்தாகும். பசியும் பட்டினியும் தாக்கி, வாழப் பிறந்த மக்கள் வீதிகளிலே பிணங்களாவதை, நாம் சகிக்கமுடியாது. காங்கிரசாட்சியின் போக்கால் மக்கள் மாளத் துவங்கும் பரிதாபம் காண, இதயம் கொதிப்போர் ஏராளம். அவரது முயற்சி, இத்துயர் துடைக்கும் பணியில் திரளவேண்டுமென விரும்புகிறோம்—பசியும் பட்டினியும் பரவாமல் தடுக்க; இடைக்கால நிவாரணம் செய்துதர.

---

## பாகிஸ்தானில் பாசிசம்!

'எல்லைக் காந்தி'யென்று அழைக்கப்படும் கான் அப்துல்கபார்கானைப் பற்றி வரும் தகவல்கள் கலக்கமூட்டக்கூடியவைகளாக இருக்கின்றன. கடந்த சில மாதங்களாக அவரது உடல் நலம் சீர்கேடுற்றுவரும் செய்திகளை, அடிக்கடி பெற்றுக் கொண்டுள்ளோம். இவ்வளவு மோசமான நிலையிலிருக்கும் அவரை இன்னும் பாகிஸ்தான் சர்க்கார் விடுதலை செய்யவில்லை — மாறாக சிறையிலேயே பூட்டிவைத்திருக்கிறது.

மார்ச் 25-ந்தேதியன்று அவரைப்பற்றி காபூல் வானொலி நிலையம் வெளியிட்ட செய்திமூலம், அவரது உடல் நலம் மிகமிகக் கேடுற்று வருவதாக அறிகிறோம். சிறையில், அண்மையில் அவரைக் கண்டுவந்த, யாககான் என்பவர், இத்தகவலைத் தந்துள்ளார்.

அப்துல் கபார்கான், சிறையிலடைக்கப்பட்டிருப்பது அரசியல் காரணத்துக்காகவேயாகும். கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்கு மேலாக, தள்ளாத அக்கிழவர், சிறைக்குள் தள்ளப்பட்டு கிடப்பதை நாம் கண்டித்தே வந்துள்ளோம். பாகிஸ்தான் பிரிவினையேற்படுமுன், அந்தக் கோரிக்கைக்கு அவர் ஆதரவாக இல்லையென்றாலும், காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராக விளங்கினாரென்றாலும், பிரிவினைக்குப்பின் 'பாகிஸ்தான் கூடாது' என்று அவர் மறுக்கவில்லை; தானும் ஒரு பாகிஸ்தான் பிரஜையாகவே வாழப்போவதாக அறிவித்தார்.

தாயகப் பற்றுக்கொண்ட ஒரு அரசியல் வாதியை சிறையில் பூட்டிவைப்பது மிகமிக மோசமாகும். இவரைப்போலவே, பூட்டிவைக்கப்பட்ட மற்றொரு அரசியல் தொண்டர் காஜிஅதாவுல்லாகான், சிறையிலே நோய்வாய்ப்பட்டு, உற்றார் உறவினரின் பராமரிப்பு எதுவுமின்றி, சிறைக்குள்ளேயே செத்தார். இந்த கோரமரணம் கேட்டு, ஜனநாயக வாழ்வில் நம்பிக்கையுள்ள எல்லோரும் கலங்கினார்கள்—கண்டித்தார்கள்.

இருந்தும், எல்லைகாந்தியாரின்—உடல்நிலைபற்றி திடுக்கிடக் கூடிய தகவல் பல வந்துகொண்டிருந்தும் இன்னும் இவரை சிறைக்குள்ளே போட்டு சித்ரவதை செய்வதன் நோக்கம், நமக்கு விளங்கவில்லை.

தனிப்பட்ட ஒரு அரசியல்வாதியால், பாகிஸ்தான் கரைந்துவிடுமென்று, பாகிஸ்தான் சர்க்கார் கருதுமென்றால் அதைவிட வெட்கக்கேடு வேறு எதுவுமில்லை. வீண் குரோதத்தால், ஒரு அரசியல் தலைவரின் வாழ்வு, சிறையிருட்டுக்குள் வீழ்த்தப்பட்டது என்றே நாகரீக உலகம் பேசும்; எதிர்காலம் கேலி செய்யும்.

இந்த நேர்மையற்ற செயலை ஜனநாயகம் விரும்புவோர், கண்டிக்காமல் விடார். மனங்கூசும் இந்த நடவடிக்கையை ரத்து செய்யவேண்டும்—பாகிஸ்தான் சர்க்கார். அடக்குமுறைப் பாதை வலிவு தராது, வீழச்செய்யும்! இதை உணரவேண்டும் பாசிசப் பாதை நோக்கிகள்!!

---

5-ம் பக்கத் தொடர்ச்சி

பார்த்தால், "இரண்டரை ரூபாய் ஸோபாக்களில் புழுவாய்த் துடிப்பார்கள். உடலும் உள்ளமும் எரிவார்கள். ஆறு அணுக் கொடுத்து ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிட்டால் தான் அந்த எரிச்சல் பணக்காரர்களுக்குத்தீரும்!"—பணம் படைத்தோர் மனம் கஷ்டப்படுகிறதாம்! கல்கியார் கூறுகிறார் — இப்போது மாளிகைவாசமும் நஞ்செய் புன்செயும் ஏற்பட்டுவிட்டபிறகு—எழுதுகிறார்! வக்கீலாகிறார், பணக்காரர்களுக்கு!! இது 1952 கல்கி—1938ம் ஆண்டு கல்கியை எண்ணிப் பாருங்கள்! திருச்செங்கோட்டுக்கும் ஆனந்தவிகடனுக்கும் இடையிலே, ஓடிக்கொண்டிருந்த கல்கியைப் பாருங்கள்! அந்த நினைவுகளை, அவரே நினைத்தால், இப்படியா எழுதுவார்? திருடிக் கஷ்டப்படும் முத்தையாவும், தீபாவளிக்கு வீட்டுக்கு வரும்போது அவதிப்படும் தேச பக்தனின் ஏழ்மையும், நல்லானும்தான் தென்படுவார்கள்! இப்போது, இடமும் வசதியும் மாறிவிட்டதே—வாடகை வீட்டிற்குள் வசித்த கல்கியா இன்றிருக்கிறார். இல்லையே! வாகனவசதியும், வறுமையில்லா வாழ்வும் பெற்றதும், ஏழைகளைக்காண கண் கூசுகிறது! பணக்காரர்களைப்பற்றி எழுதுவதும் பேசுவதும் 'துவேஷமாகப்' படுகிறது—'ஐயயோ' என்றலறுகிறார்!!

★

பேர்லின் வீழ்ச்சி
சைக்கிள் திருடன்
முஸ்ஸார்ஸ்கி
யுக்கிவாரிசு
புகழ் பெற்ற அமெரிக்கர்
டேரி அம்மை
சதுப்பு நிலப்பெண்
மந்திரப் பெட்டி
அண்ட் கிராண்ட் பேட்ரன்

என்கிற படங்கள், அண்மையில் சென்னையில் நடைபெற்ற' பிலிம் விழாவில் காட்டப்பட்டன. ரஷ்யா, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், ஹங்கேரி, பிரான்ஸ், அமெரிக்காமுதலிய பல்வேறு நாட்டுத் திரைப் படங்கள் அங்கே காட்டப்பட்டன. கடமை தவறாத வாலிப உள்ளத்தைக் காட்டிற்று, பேர்லின் வீழ்ச்சி! ஏழ்மையையும் மனிதசுபாவத்தையும் காட்டிற்று இத்தாலியப்படம் சைகிள் திருடன்! இசையுலகில் புதுமை செய்த இன்னிசைவாணரின் வாழ்க்கைச் சித்திரமாகயிருந்தது ரஷ்யசித்திரம் முஸ்ஸார்ஸ்கி! நாடக நடிகையொருத்தியை கதாபாத்திரமாகக் கொண்டு தமது நாட்டுப் பற்றுப் பிரதிபலிக்க ஹங்கேரியர் வெளியிட்டிருந்த படம் டேரி அம்மையார்! நாலு வயது சிறுவனைக்கொண்டு நமது கவனத்தையெல்லாம் கவர்ந்தனர் ஜப்பானியர் யுகிவாரிசு என்னும் தமது ஒளிச் சித்திரம்மூலம்! டாக்டர் ஒருவரின் ஆர்வத்தை அடிப்படையாகவைத்து பிரெஞ்சு நாட்டார் எடுத்திருந்தனர் "அன் கிராண்ட்பாட்ரன்!" சினிமாவைக்கண்டுபிடித்த வில்லியம் பிரிஸ் கிரீனைப்பற்றி அழகாக விளக்கினர் பிரிட்டிஷார், 'மந்திரப் பெட்டி' மூலம்! இத்தாலிய கிராமப்புற நிகழ்ச்சிகளைத் திறம்பட காட்டிற்று, சதுப்பு நிலப்பெண்! அமெரிக்க நீதிபதியொருவரின் அருங்குணசித்திசபங்களை விளக்கிற்று 'மெக்னீவிஷியண்ட் யாங்கி!, இத்தகைய சிறப்புறு படங்களில் குறிப்பிடக்கூடிய அம்சம், இவைகள் யாவும் அந்தந்த நாட்டு நிலைகளைக் காட்டும் கண்ணாடி போலிருந்ததுதான். வாழமுடியாது தவிக்கும் ஏழையையும், காதலில் சிக்கிய வாலிபனையும், இலட்சியத்துக்காக உயிரைத்திரணமென மதிக்கும் இளநங்கையும், குடும்பக்கொந்தளிப்பால் தவிக்கும் நடுத்தர வகுப்பினனையும், கண்டோம், இக்காட்சிகளில். அந்தந்த நாட்டுமக்களின் நிலைமைகளை ஹங்கேரியப் படமும், இத்தாலியப் படமும் காட்டிற்று — விடுதலை ஆர்வமும், போருக்குப் பின்னேற்பட்ட தொல்லைகளும் இந்தப்படங்களில் விளங்கின! ஆனால், 'கல்கி'யாரோ, இந்தப் படங்களைத்தான் பார்த்தார் போலும் — இவைகள் காட்டும் விளக்கத்தைக் கவனிக்கவில்லை! ஏழ்மையைக் காட்டினார்கள், ஏழையின் உள்ளத்தையும் காட்டினார்கள் — இத்தாலியப்படங்களில். நண்பர், கல்கி, தமது கட்டுரைக்கு ஆதாரமாக, அமெரிக்கப் படங்களையும் ரஷ்யப் படங்களையும் எடுத்துக்கொண்டிருக்கிறார். அவைகளைப் போல இங்கும் தயாரிக்கப்படவேண்டும் என்று சொல்லட்டும்; நமது ஆசையும் அதுதான். ஆனால் அவர் அதைச்சொல்லவில்லை! அவைகளைக் காட்டி, தவறான அபிப்பிராயத்துக்குத்தள்ளுகிறார் மக்களை. மனதில் புகையும்ஆத்திரத்தைவெளியே இறைக்கிறார்—ஏழைகளைக் காட்டலாமா? ஏழைகளைக் காட்டுவதால் பணக்காரர்மீது துவேஷம் வராதா? என்று வக்கீலாகிறார்! அதற்கு ஆதாரமாகக் கூறுகிறார், "ரஷ்யப் படங்களில் உழைப்பின் உயர்வைக் கூறுகிறார்களாம். இங்கே உழைப்பவன்படும் அவதியைமட்டும்காட்டுகிறார்களாம்."

ருஷ்யப்படங்களில் மட்டுமல்ல, அந்த இன்பபூமியில், உழைப்புக்குத்தான் மதிப்பு! மனிதர்களுக்குள் பேதமில்லாத அங்கே, உழைப்புதான் கடவுள் — எஜமான் சர்க்கார் எல்லாம்! ஆனால் இங்கே, உழைப்புக்கு மதிப்பா வாழ்கிறது—'கல்கி' ஆபீஸ் 'கம்பாசிடரை'க் கேட்டால் தெரியுமே! உழைப்புக்கும் உயர்வுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது—'கல்கி'யின் ஊர்ப்பக்கம் சென்று வயலிலே வேலைசெய்யும் காத்தானையும், வரப்பிலே அமர்ந்திருக்கும் கூத்தப்பிள்ளையையும், வீட்டிலே வெற்றிலைத் தட்டோடு இருக்கும் சதாசிவஐயரையும் பார்த்தால் தெரியும், உழைப்பின் மதிப்பு! இங்கே

## தவறான செய்தி

24—3—52 'மாலைமணி'யில் சிதம்பரம் வட்டத் தோழர்களுக்கு என்ற தலைப்பில், சிதம்பரம் தோழர் சி. எஸ். சடகோபனைப்பற்றி அவதூறான செய்தி வந்திருப்பதைக் கண்ட சிதம்பரம் திராவிடமுன்னேற்றக் கழகத்தார் வருந்துவதுடன், 25—3—52 மாலை 6-மணிக்கு தி. மு. க. செயற்குழுகூடி, 'மாலைமணி'யில் வந்த செய்திக்கும், கழகத்திற்கும் எந்தவிதமானசம்மந்தமுமில்லையென்பதோடு, பொறுப்புள்ள ஒரு தோழரைப்பற்றி, யாரோ சில விஷமிகள் இப்படி எழுதி, கழகக்கட்டுப்பாட்டைக் குலைப்பதைப் பெரிதும் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர் சி. எஸ். சடகோபன் இன்றுவரை கழக நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் ஒத்துழைத்து வருகிறார் என்பதை 26—3—52ல் சிதம்பரம் தி. மு. க. செயலாளர் இரா. சக்கிரவர்த்தி நேரில்வந்து பொதுச்செயலாரிடம் தெரிவித்ததோடு, அத்தவறான செய்தியைப்பற்றி வருத்தம் தெரிவித்தார்.

உழைப்புக்கு மட்டுமல்ல; மனிதத் தன்மைக்கே மதிப்பில்லை. ஆனல் நண்பர், ஆயாசப்படுகிறார்! இல்லாத ஒன்றை எப்படிக் காட்டமுடியும்? ஆலையரசனும், வேலை செய்பவனும், மாமனார் மருமகனுக இருப்பதையா படம்எடுக்கமுடியும். எடுத்தால்தான் நம்புவரா! ஐயர் வீட்டுப் பெண்ணும் அடிமை காத்தான் மகளும், நிலவொளி நேரத்தில் 'காதல் பாட்டு' பாடுவதாகவும், அதைக் கண்டு தோள்மேல தோள்போட்டு ஐயரும் காத்தானும் சந்தோஷப் படுவதாகவும், படத்திலே காட்டத்தான் முடியுமா? அல்லது இந்த அற்புதத்தைக்கண்டு கருடன் ஓடி, வைகுந்தம் சேர்ந்து, பரந்தாமனிடம் தெரிவிக்க அவர் லட்சுமிசமேதராய் பூலோகம் வந்து, 'புக்தா! மெச்சினேன் உன்னை. ஜாதிமதம் ஏது. இதை நிரூபித்த உனக்கு சாச்யுத பதவி தந்தேன்' என்று கூறிச் செல்வதாகக் கதையெழுதி, கலர் விளம்பரம் செய்து, படம் எடுத்தால்தான் ஓடுமா?

கல்கி சொல்கிறார்—நாம் நாட்டுப் புகழைவிளக்கும் படங்கள் எடுக்கப் பட வேண்டுமாம். புகழ் விளக்கம் வேண்டுமாம்! எந்தப் புகழை, எப்படி விளக்குவது என்று எவரும் அவரைக் கேட்காததால்,பேனவை யோட்டியிருக்கிறார். இங்குள்ள புகழை விளக்க, இங்குள்ளபடியே படம் எடுத்து வெளியாருக்குக் காட்டினல் கேலியோடு விடமாட்டார்! கெக்கலிப்பர்!!

★

நாட்டிலே, இன்று, புது மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. சமுதாய பேதங்கள் ஒழியவில்லை! ஏழையும் பணக்காரனும், கீழ்ஜாதியும் மேல்ஜாதியும், விதவைத்துயரும், கைம்மைக் கொடுமையும், சீரழிந்துக்கிடக்கிறது. இந்தச்சீரழிவின் கேடுகளை, மக்கள் முன்காட்டி, இவைகளைப்பற்றி உணரச் செய்யும் பணிதான், இப்போது முக்கியமானது. இவைகளை விளக்கும் சமூகப்படங்களைக் கண்டு வயிறெரிவதும், வக்காலத்து வாங்குவதும் நாட்டு நன்மையை குட்டிச்சுவராக்குவதாகும்! சமுதாயத் தட்டில் மேலேயிருப்பவன் வாழவும், கீழேயிருப்பவன் தேயவுமான நிலையை நீடிக்கச் செய்ய முயல்வது பலனளிக்காது. "துவேஷம் ஏற்படுத்தாதீர்!" என்று, துடுக்கோடும், மிடுக்கோடும் எழுதுவதால், உண்மைகளுக்குத் திரைபோட முடியாது. இன்று மனிதன், மனிதனைப் பார்க்க விரும்புகிறான்! அந்த மனிதன் மூலம் நாட்டின் நிலையை மக்களுக்கு விளக்கவேண்டும்! இது வெற்றியானல்தான், உழைப்பின் மகிமை குறித்து, விளக்க முடியும்—சாக்கடையிலிருந்து சந்தனத்தைக் கரைக்க முடியாது! இன்றுள்ள பணி, சாக்கடையைத் துடைக்கும் பணி. இதை கண்டு பழமையும் பண உலகும் 'தீது, இது' என்று போதனை புரிகிறது. அந்த ரகத்திலே கல்கியும் சேர்கிறார்! 'சீசன் சரக்காயிருந்தாலும்' 'சிந்தனையோடு எழுதப்பட்டவையானலும்' சரி, அவருடைய எண்ணங்கள் பழமைக்கு மெருகூட்டுகின்றன. பரிதாபப் படுகிறோம், பணஆசை அவரை இப்படி ஆக்கிவிட்டதே எனபதை எண்ணி!

✲

## ஜப்பான்

"ஜப்பான் அமெரிக்காவின்காலனி நாடாக்கப்பட்டு வருகிறது. ஜப்பானில் அமெரிக்காவுக்கு ராணுவ தளங்கள் கொடுக்கபபட்டிருக்கின்றன. ஜப்பானில் ராணுவத்தினரை விசாரிக்க அமெரிக்கருக்கு கிரிமினல்கோர்ட்டு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது."

சர்வதேச சட்ட விஷயங்கள் அறிந்த ஜப்பானிய அறிஞர் பேராசிரியர் ஹிகோமட்ஸு, இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே சமீபத்தில் நடைபெற்ற 'பாதுகாப்பு ஒப்பந்தம்' (Defence Pact) பற்றி, ஜப்பானியபார்லிமெண்டின் வெளிநாட்டு விவகாரக் கமிட்டியில் பேசுகையில் இந்தகைய கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

ஜப்பானுடன் அமெரிக்கா அண்மையில் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருககிறது — 'பாதுகாப்பு' என்ற பெயருடன். கடந்தபோருக்குப்பிறகு, அமெரிக்கா தனது ஆதிபத்யத்தை ஜப்பானில் நிலைநாட்டி வருவதை உலகு அறியும். இப்போது தனது துருப்புகளையும், ஆயுதத் தளவாடங்களையும் குவிக்கும் நோக்கத்துடன் செய்யபபட்டிருப்பதே, இந்த ஒப்பந்தம் என்று கருதப்படுகிறது — ஜப்பானில் பலரால்.

* * *

அமெரிக்க முதலாளிகளின் "நியூயார்க்டைம்ஸ்" இதுபோல எழுதுகிறது 'ஜப்பான் குறித்து:—

"ஜப்பான், படைதளங்கள் வைக்கக்கூடிய கேந்திரஸ்தானமாகும். தூரக்கிழக்கில் அமெரிக்காவுக்கான ஆபத்தைத் தவிர்க்கும் முக்கிய தளம்—இது."

பிரிட்டிஷ் முதலாளிகள்குரலான "நியூஸ்நியூஸ்" எழுதுகிறது:—

"ஜப்பானிய மக்களை, தமக்கு கட்டுப்பட்டோர்களாக அமெரிக்கா வைத்திருக்கவேண்டும். உலகத்தில் அமெரிக்கா தனது போக்குக்கான முக்கிய இடமாக இதைக் கருத வேண்டும்."

* * *

இந்தச்செய்திகள், ஜப்பான்பற்றி அமெரிக்கா கொண்டுள்ள கருத்தை விளக்குவதாகும். ஜபபான்மூலம் தமது, ஆதிபத்யத்தைப் பரவச் செய்யத திட்டமிட்டு வருகிறது அமெரிக்க ஆதிபத்யம். இதற்கு அனுசரணையாக, ஜப்பானில் அமைக்கபபட்டிருக்கும் சர்க்காரும்இருந்து வருகிறது. யோஷிடாவின் தலைமையில் இயங்கும் ஜப்பானிய சர்க்காரின் ஒவ்வொரு நடவடிக்கையும், இந்தக்கருத்தைத்தான்வலியுறுத்துகின்றன. சுதந்தர உணர்ச்சியும், விவேகமும் நிறைந்த ஜப்பானிய மக்கள், மீளா அடிமைகளாக்கப்படுவதை எண்ணும்போது வருந்தத்தான் வேண்டும். என்செய்வது! காட்டைக் காட்டிக் கொடுப்போர் எங்கும் இருக்கிறார்களே!!

குமரிமன்னன்
எழிலரசி கிளியோபாட்ரா 1—8—0

க. அன்பழகன் எம். ஏ.
அழகுராணி 1—4—0

இராம. அரங்கண்ணல்
வியர்வை விருந்து 0—6—0

தனிப்பிரதி வேண்டுவோர்—புத்தக கிரயத்தை M. O செய்யவும். விற்பனை க்கழிவு 25% அனுப்பவும் செலவு இனம்.

விவரங்களுக்கு:- எம். தூரி
14. ஏ. குப்பையர் தெரு
A. சென்னை 1.

# வழக்கு தொடரப்படும்

"திராவிட நாடு" இதழில் வெளி வந்த கட்டுரைகள், கதைகள், ஆகிய வற்றினைத் தொகுத்தும், சிதைத்தும், நூல்வடிவாக்கி, C. N. A. புத்தகங்கள் என்று பல வெளியீடுகள் சமீப காலத்தில் கிளம்பியுள்ளன. நேர்மையான நோக்கமற்ற பணந்தேடிகளின் இந்த தீயசெயலுக்கு பொறுப்புவாய்ந்த சில பிரசுராலயங்கள், ஆதரவு காட்டியதால் சுயநலக்காரர்கள், பணம் பறித்துக் கொள்ளமுடிந்ததுடன், பொதுமக்களுக்கும் வீணானசெலவும் ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய மோசடிகளைத்தடுக்க சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் அனுமதிச் சீட்டோ, கையொப்பமோ இன்றி என்பெயரால் புத்தகம் வெளிவர அச்சியற்றியவர்களும், சட்டப்படி தவறு செய்தவர்களே ஆகிறார்கள்.

ஒருவர் பெயரால் ஏதேனும் புத்தகம் வெளியிடுவது என்றால், அவருடைய சம்மதக்கையொப்பமின்றி அச்சடித்துக்கொடுப்பது பொது நாணயத்துக்கு உகந்ததல்ல-சட்டப்படியும் தவறு.

எப்படியாவது பக்கங்களை அதிகப்படுத்திக்காட்டி விலையைக்கூட்டிவிடவேண்டுமென்று, தொடர்பு, பொருத்தம், விளக்கம் அற்றமுறையிலே இந்த வெளியீடுகள்உள்ளன.

கருத்துகள் சிதைக்கப்பட்டும் திரித்தும் வெளியிடப்படுவது எத்தகைய கேடுகளை விளைவிக்கும் என்பதை எண்ணிப்பாராமல், பொதுமக்களுக்கு இந்தத் துரோகம் இழைக்கிறார்கள்— இவ்வளவும் பணத்துக்காகச் செய்யப்படுகிறது —இந்த இழிசெயலை ஒழித்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்.

நான் ஏற்கனவே சில பிரசுராலயத்தாருக்கு உரிமையாக்கியுள்ள சிலகட்டுரைகளும் இந்த வெளியீடுகளிலே உள்ளன — ஆகவே அவர்களும் வழக்குத் தொடுக்க முன்வந்துள்ளனர்.

சில சுயநலமிகள், நேர்மையான பிரசுராலயத்தாரை அணுகி, அண்ணா சம்மதம் தந்திருக்கிறார், ஆகவே வெளியிடுங்கள் என்று கூறி, பணம் பறித்திருக்கிறார்கள்.

எனவே, இத்தகையவர்களை நாடு அறியவும், கேடுகள் களையப்பட வேண்டும் என்பதற்காகவும், வழக்கு தொடரப்படுகிறது.

இதுவரை, இவ்வித எத்தர்களிடம் சிக்காதிருக்கும் பிரசுராலயங்களும், அச்சகங்களும், எச்சரிக்கையாக இருந்து இவ்வித 'பொது ஜன விரோதிகளை' அம்பலப் படுத்தும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுகிறேன்.

கழகங்கள், வாசகசாலைகள், ஆகியவற்றின் வளர்ச்சிக்காக என் நூலை வெளியிடவேண்டுமென்று கேட்டபோது, நான் யாருக்கும் தடைகூறாமல், தாராளமாகவே தந்திருக்கிறேன்.

தனிப்பட்ட முறையிலே நண்பர்களின் உதவிக்காகவும் பல 'ஏடுகளை'த் தந்திருக்கிறேன்.

பதிப்பகங்களுக்கும் பல ஏடுகளைத் தந்திருக்கிறேன்.

நாட்டுக்குத்தேவையான கருத்துகள் யாவை, அவை எவ்விதம் தொகுக்கப்படவேண்டும், என்பன வற்றை நானே கவனித்து வெளியிடப்பட்ட அந்த ஏடுகள், போன்றதல்ல இந்தக் 'களவு' ஏடுகள். இதே விதமான அநீதி தங்களுக்கு இழைக்கப்பட்டிருப்பதாக நமது கழக எழுத்தாளர் சிலரும் என்னிடம் கூறியிருக்கிறார்கள். தீயசெயல் முளைத்திருக்கிறது. எனவே தமிழ் நாட்டிலே முளைத்து வரும் இந்தத் தீயசெயலை முளையிலேயே கிள்ளி எறிய என்னுடன் ஒத்துழைக்கும்படி, பிரசுராலயங்களையும், அச்சகங்களையும், பொது மக்களையும், இப்பக்க ஏடுகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

அண்ணாதுரை

## விசித்திரம்

திருவாங்கூர் கொச்சி சட்டசபை சபாநாயகர் தேர்தல் இந்த வாரம் நடைபெற்றது. கே. பி. நீலகண்ட பிள்ளை என்னும் சோஷியலிஸ்டு அபேட்சகர்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சட்டசபையில் கட்சிகளின்நிலை:—காங்கிரஸ் 46, ஐக்கிய முன்னணி 31, சோஷியலிஸ்டு 11, திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் 8, சுயேச்சைகள் 11, கொச்சி கட்சி 1.

சோஷியலிஸ்டுகள் 11 பேர்தானே! எப்படி அவர்களுக்குள் ஒருவர் சபாநாயகராக முடிந்ததெனக் கேட்கலாம். முற்போக்குக் கொள்கைகள் பேசும் சோஷியலிஸ்டுகட்சிக்கு, பிற்போக்கு ஸ்தாபனம்-காங்கிரஸ் ஆதரவு கிடைத்ததாம். பழையபாசம் — புது உறவு!

அவருக்கு மொத்தம் 58 ஓட்டுகளும் அவரை எதிர்த்த சி. அச்சுதமேனன் எனும் கம்யூனிஸ்டுக்கு 46 ஓட்டுகளும் கிடைத்திருக்கின்றன.

சோஷியலிஸ்டுத் தோழருக்கு ஆதரவாகவந்த ஓட்டுகள் விபரம், காங்கிரஸ் 46, சோஷியலிஸ்டு 11; சுயேச்சை 1.

கம்யூனிஸ்டுத் தோழருக்குஆதரவாக கிடைத்த ஓட்டுகள்: திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் 8, சுயேச்சைகள் 10, ஐக்கிய முன்னணி 29, கொச்சி கட்சி 1.

யார் யாருக்கு, யாரார் ஓட்டளித்திருக்கிறார்கள் பாருங்கள். காங்கிரசைக்குறைகூறும் சோஷியலிஸ்டுக் கட்சி இப்போது கூடிக்குலாவுகிறது! 'முற்போக்கு' 'பிற்போக்கை' கட்டியணைக்கிறது! எங்கே காண முடியும் இந்த விசித்திரத்தை?

## காஞ்சியில்

30-3-52 ஞாயிறு மாலை காஞ்சி கலியாணசுந்தரம் அவர்கட்குப் பாராட்டுக் கூட்டம்.

இடம்: இரட்டை மண்டபம்.

தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார்.

3-ம் பக்கத் தொடர்ச்சி

என்றால், காரணமின்றி, நியாயமின்றி, அவசியமின்றி; சட்டசம்மதமின்றிச் செய்யமாட்டார்கள், என்றுதானே பொதுவாக எவரும் எண்ணுவார்கள். அவ்விதம் எண்ணும் விதமாகத்தானே ஆளவந்தார்களின் தாளங்களும் துந்துபிகளும் முழங்கின! இப்போது 'அதுகளின்' முகம், என்ன வழிய வழிய இருக்கும், என்று எண்ணுகிறீர்கள்; இதோ தீர்ப்பு — குற்றமில்லை, என்று! குற்றக் கூண்டிலேமட்டுமல்ல, சிறைக் கொட்டடியிலும், துரத்தப்பட்டேன் —துரத்திய துரைத்தனத்தாரைப்பற்றி என்ன 'தீர்ப்பு' பொதுமக்கள் தருவார்கள்.

பொறாமை, பொச்சரிப்பு, முன்கோபம், ஆகிய கெட்ட குணம் கொண்டவர்கள் பொய்க்கேசுகளை ஜோடித்து நல்லவர்களை அலைக்கழிப்பதுண்டு. அப்படிப்பட்டவர்களைச் சமூகத்தின் சாக்கடைப் புழுக்கள் என்று அறிவுடையோர் கூறுவர். இழிநிலைதான் அவர்கட்குக் கிடைக்கும். தனிப்பட்ட மனமாச்சரியத்தால் தூண்டப்பட்டோ, பொறாமை பொச்சரிப்புக் குணத்தாலோ பொய்வழக்குத் தொடுக்கும் அளவுக்குச்சிலருடையபோக்கு இருந்துவிடும் — ஆனால், ஒரு நாடு ஆளும் சர்க்கார், தன் ஆட்சியின் கீழ் உள்ளவர்களின் உரிமைகளை யாரும் பறித்துக்கொள்ளாதபடி பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் சர்க்கார், என்மீது தொடுத்த 'ஆரியமாயை' வழக்கு, எப்படி இருக்கிறது, என்று பாருங்கள்—எவ்வளவு ஆலோசனையற்ற, அவசரப்புத்தியுள்ளகாரியம். இதோ நீதிபதிகள் இருவர் கூறுகிறார்களே குற்றமில்லை என்று—காங்கிரசாட்சி என்னபதில் கூறுகிறது! காளை பால் தாரதா — ஆமாம் — மறந்துவிட்டேன்—அவசரத்திலே அவ்விதம் சொல்லிவிட்டேன் — என்று வழ வழா பேசமுடியும்-சர்க்காராயிற்றே —கந்தன் அல்லவே!!

ஒரு 'ஏடு'—அதைப் படிப்பதால் மனதிலே, 'துவேஷம்' அடைந்து பலாத்காரத்தில், இரத்தவேட்டையில் இறங்கிவிடுவார்கள், என்று, உண்மையாகவே அச்சப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டதா?

'ஆரியமாயை'யைப் படித்தேன்—படித்ததும் என்மனம் எரிமலையாகிவிட்டது, எதிரே ஏகாம்பர குருக்கள் வந்தார், ஏ; ஆரியனே! தமிழகத்திலே தலைகாட்ட என்ன தைரியம் உனக்கு! என்று கூவினேன் கொக்கரித்தேன் — எனக்கு அவ்வளவு 'துவேஷம்' மூண்டுவிட்டது ஓட ஓட விரட்டினேன். ஏகாம்பர ஐயர், பரமசிவம்! சச்சிதானந்தம்! சர்வேஸ்வரா! — என்றெல்லாம் கதறினார்—நான் விடவில்லை—என்மனதிலே 'ஆரியமாயை' படித்ததாலே மூண்டெழுந்த ஆத்திரம், ஏகாம்பரத்தை அடி அடி என்று அடித்த பிறகுதான் ஓரளவுக்கு அடங்கிற்று என்று, யாராவது ஒரு அடிவருடியிடமிருந்தாவது, 'வாக்குமூலம்' கிடைத்திருக்கிறதா சர்க்காருக்கு.

அல்லது ஜகத்குரு சங்கராச்சாரியாரோ, சாதாரண ஐயரோ, 'ஆரியமாயை' எனும் ஏடு, நாடு கெடும் நஞ்சை ஊட்டவல்லது, நாடாள்வோர் இத்தகைய ஏடுகளை உலவ விடுதல் மகாபாபம் மகாதோஷம் என்று கூறினார்களா!

ஊரூருக்கும் கூட்டம் நடத்தி 'ஆரியமாயை' மூலம் வகுப்புத்துவேஷம்மூண்டுவருகிறது, என்று யாராவது கிளர்ச்சி செய்தார்களா?

என்ன கண்டு, 'ஆரியமாயை'மீது பாய்ந்தனர், காங்கிரசாட்சியினர் சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போம் பேச்சு மூச்சு இராது!

'ஆரியமாயை' — ஒரு தொகுப்பு நூல்!

இந்நாட்டு மதம், ஜாதி வகுப்பு மூடத்தனம், வைதீகவெறி, இவை பற்றி, பல்வேறு 'மேதைகள்'வெளியிட்ட கருத்துக்களை, கோர்த்து வெளியிடப்பட்ட ஏடு.

இது வகுப்புத் துவேஷத்தை மூட்டுவதாக இந்தக் காங்கிரசாட்சிக்குத் தென்படுகிறது! எவ்வளவு கேலியாகக் கூறுகிறார்கள் மக்கள் இன்று — இரு நீதிபதிகள் 'ஆரியமாயை'யில் வகுப்புத் துவேஷம் இல்லை, என்று தீர்ப்பளித்துவிட்டார்களே, ஏன் காங்கிரசாட்சியினர் இப்படி ஒரு ஆதாரமற்ற சட்டபலமற்ற வழக்கைத் தொடுத்தார்கள்—என்று கேலியாகத்தானே பேசுகிறார்கள். பேசாமலிருப்பார்களா? நாடாள்பவர்கள், இப்படியா தங்கள் நிலையை ஆக்கிக்கொள்ள வேண்டும்! ஆழம் தெரியாமல் காலை விடும் பேர்வழிபோலவா, அதோ கச்சக்கரதாரிகள்நடந்துகொள்வது!

சாதாரண மானவர்கள்கூட, ஒரு வழக்குத் தொடுப்பது என்றால், தோற்று விட்டால் என்ன செய்வது, பலரும் கேவலமாக பேசுவார்களே என்று யோசிப்பார்கள் — போகக் கூடாது, போனால் முகத்தில் கரிபூசிக் கொள்ளக் கூடாது, என்று கூறுவார்கள். ஒரு நாட்டை ஆளும் நிலையைப் பெற்றவர்களோ, வழக்குத் தொடுக்கிறார்கள், உயர் நீதிமன்றம், குப்பைக்கூடைக்கு அனுப்புகிறது!

கள்ளன் பிடிபட்டான், பிடிபட்டான் கள்ளன், என்று கூவி, மீசையை முறுக்கிவிட்டபடி, இதோ, இந்தக் கோணிமூட்டைக்குள்ளே கள்ளன் இருக்கிறான் என்று கூறியபடி, மூட்டையை அவிழ்த்து மன்னன் முன் காட்டுகிறான், ரணகளச் சூரன் ரங்கநாதன் —மூட்டைக்குள்ளே இருப்பதோ, வைக்கோற் பொம்மை! சபையிலுள்ளவர்கள்' 'சபாஷ்' கூறவா செய்வார்கள்!!

இதோ, இரு உயர்தர நீதிபதிகள், கூறுகிறார்களே, 'ஆரியமாயை'யில் வகுப்புத்துவேஷம் கிடையாது, என்று' யாருமே செய்யமுடியாத வீரதீர பராக்கிரமச்செயலைச் செய்துவிட்டவர்கள் போல அல்லவா, கிளம்பினர், காங்கிரசாட்சியினர், 'ஆரியமாயை'யைத் தாக்கி கடைசியில்! செச்சே! எனக்கே, வெட்கமாக இருக்கிறது, அடிக்கடி கூற!! ஏன், இவ்வளவு அவசரபுத்தி! எதற்காக இவ்வளவு 'பதைப்பு'—! தனி நபராக இருந்தால், அவன் புத்தியே அது என்று கூறிவிடலாம், சர்க்காரை அல்லவா நடத்துகிறார்கள்!!

உயர்நீதிமன்றம் பார்த்து குற்றமில்லை, என்று கூறினதால், நல்லதாயிற்று—வழக்கு அங்கு செல்ல

## வருந்துகிறோம்

காஞ்சிபுரம் வள்ளுவர் கழகஉறுப்பினரான தோழர் பச்சையப்பன் அவர்கள், 16—3—52 அன்று பஸ் ஓட்டிக் கொண்டு செல்லும் பொழுது, பஸ் கவிழ்ந்து மாளமடைந்த செய்தியறிந்து வருந்துகிறோம்.

வில்லை என்றால், குற்றவாளிப் பட்டியலில்தானே என்பெயர் இருந்து கொண்டிருக்கும்! குற்றமற்றவர்களைக் குற்றவாளிகளாகச் சித்தரிக்கவா' சிரமப்பட்டு ஒரு ஆட்சியை நடத்துகிறார்கள்!—அவசரக் கோலத்தை அள்ளித் தெளிக்கும் போக்கிலே நடந்துகொள்ளும் காங்கிரசாட்சியிலே, எந்த நேரத்தில், யாருக்கு, எத்தகைய ஆபத்து உண்டாகக்கூடும், எத்தகைய வழக்கு கிளம்பக்கூடும், என்று யார் கூறமுடியும்! இந்த நிலையிலே மக்கள் வைக்கப்பட்டிருப்பதற்காகத் தானா 'சுயராஜ்யம்' பெற்றது. எந்த ராஜ்யத்திலும், இப்படி வழக்குகளைத் தொடுப்பது, வாட்டுவது கடைசியாக, உயர்நீதிமன்றம் பார்த்து, இந்த வழக்கிலே உப்புமில்லை, சப்புமில்லை, என்று கூறுவது, அப்படியா, சரி, சரி, என்று ஆளவந்தார்கள் கூறுவது என்ற நிலை இருக்கலாமா?

'ஆரியமாயை' மூலம் வகுப்புத் துவேஷ மூட்டியதாக என்மீது குற்றம் சுமத்திய சர்க்காரின் போக்கை, மக்கள் நன்கு புரிந்து கொள்ளும் விதமான தீர்ப்பு, சென்னை உயர்நீதி மன்றத்திலே. கிடைத்திருப்பதுகண்டு. உண்மையாகவே களிப்படைகிறேன்—நண்பர்களும் மகிழ்வர்.

'வகுப்புத்துவேஷம்' என்ற பழி சுமத்தி, நமது இயக்கத்தைக் கேவலப்படுத்தும், முயற்சி, மேடை மூலமாக, மாற்றுக் கட்சியினரால் செய்யப் பட்டு, முறிந்து விட்டது.

வழக்கு மன்றங்கள் மூலமாக, 'வகுப்புத்துவேஷிகள்' என்ற பழிச் சொல்லை, நம்மீது திணிக்கவேண்டும், எனை தீய நினைப்பும், பாழ்பட்டுவருகிறது.

'ஆரிய மாயை' வழக்கு ஒன்று மட்டுமல்ல, 'இலட்சிய வரலாறு' என்ற ஏடு மீதும் வழக்கு நடைபெற்றது, அதிலேயும், வகுப்புத் துவேஷம் இல்லை, என்ற தீர்ப்புக் கிடைத்தது. 'திராவிட நாடு' இதழிலேயே, காந்தி ராமசாமியும் பெரியார் ராமசாமியும், என்ற கட்டுரையும், வெள்ளி முளைக்க எட்டு ஆண்டுகள் என்ற கட்டுரையும், வகுப்புத் துவேஷ மூட்டுவன, என்று சர்க்கார் கூறி, ஜாமீன் கேட்டனர், உயர்நீதி மன்றத்தில் பிரதம நீதிபதியும், இருநீதிபதிகளும் அமர்ந்த மன்றத்திலே, இந்தக் கட்டுரைகளிலே வகுப்புத் துவேஷமில்லை, என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

என் ஏடு மட்டுமல்ல, நண்பர் ஆசைத்தம்பி தீட்டிய காந்தியார் சாந்தி அடைய என்ற ஏடு, வகுப்புத் துவேஷமுள்ளது என்று சர்க்கார் வழக்குத் தொடுத்து, ஆசைத்தம்பியைச் சிறையில் தள்ளி வாடவைத்தனர்—பிறகோ உயர்நீதி மன்றத்திலே, அந்த புத்தகத்திலே, வகுப்புத் துவேஷமில்லை, என்று தீர்ப்புக் கிடைத்தது.

புலவர் செல்வராஜ் அவர்கள் தீட்டிய, கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா என்ற ஏடும், நாடாள்வோருக்கு வகுப்பு, மதத்துவேஷத்தை ஊட்டுவதாகத் தோன்றியது. வழக்கு தொடுத்தனர்—தீர்ப்பு, வகுப்பு மதத்துவேஷம் இல்லை, என்றுகிடைத்தது. இந்தச் சம்பவங்களின் பொருள் என்ன? பாடம் என்ன?

'வகுப்புத்துவேஷம்' என்ற குற்றம் சாட்டியதிலே, காங்கிரசாட்சியின் போக்கு தெள்ளத்தெளியத் தெரிவது போலவே, ஒவ்வொரு வழக்கிலும், 'தீர்ப்பு' நமது பக்கம் இருப்பது, நமது தூய்மையை நிரூபிக்கிறது.

தொடுத்தவழக்குகள் தூள்! தூள்! தூளியாவது, இதைக்கண்டு, காங்கிரசாட்சிக்கு வெட்கம் பிறக்க வேண்டாமா?

வீணானவழக்குகளைத்தொடுத்து, எங்களை வாட்டிடும் போக்கைக் கொண்டிருக்கும் ஆளவந்தார்களைக் கண்டிக்கும் பொறுப்பு நல்லறிவாளர்களுக்கு — அவர்கள் எந்த முகாமில் இருப்பினும்—இல்லையா, என்று கேட்கிறேன்.

பொதுநல ஊழியர்கள்மீது இவ்விதம், சட்ட பலமற்றவழக்குகளைத் தொடுத்துக்கொண்டிருப்பதுமுறை தானா? ஒவ்வொரு வழக்கையும், உயர்நீதி மன்றத்திலே கொண்டு செல்லும் காரியம் சுலபமானதா? சிரமம்எவ்வளவு? செலவுஎத்தனை? இடையே தொல்லைகள் எவ்வளவு? ஏன் குற்றமற்றவர்கள்மீது இந்தக் கொடுமை!—இதைக்கேட்க ஆளில்லையா இந்த நாட்டிலே!! மேதைகளே! தீவிரவாதிகளே! பேச்சுரிமை, எழுத்துரிமைப் பாதுகாவலர்களே! இந்தப்போக்கைக் கண்டிக்காமலிருக்கும் காரணம் என்ன?

'வகுப்புத் துவேஷம்' — ஆரிய மாயையில், இலட்சிய விளக்கத்தில் திராவிடநாடு இதழில், காந்தியார் சாந்தி அடைய எனும் நூலில், கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா எனும் புத்தகத்தில்—காங்கிரசாட்சி கூறிற்று — உயர்நீதி மன்றமோ, 'இல்லை' என்று தீர்ப்பளிக்கிறது.

எங்கள்மீது 'துவேஷம்' கொண்டவர்கள், இவ்விதம் வீண்வழக்குகளைத் தொடுக்கிறார்கள், என்பது புரியவில்லையா! இந்தத் துவேஷத்துக்கு யார் வழக்குத் தொடுப்பது, என்ன தண்டனை விதிப்பது!?

"போதாதா நாங்கள் விதித்துள்ள தண்டனை! தேர்தலின் போது தீர்ப்பு அளித்துவிட்டோமே!—என்று கூறும் பொது மக்கள், என். மனக்கண்முன் தெரிகிறார்கள், உண்மைதான்! தீர்ப்பு அளித்துவிட்டார்கள்!

நாட்டிலுள்ள கேடுகளைக் களைய வேண்டுமென்ற நல்லார்வத்தின் காரணமாக பேச்சிலும் எழுத்திலும், நாம் ஒருவேளை வகுப்புத் துவேஷம் வளரும்விதமாக நடந்து கொள்கிறோமோ, என்ற ஐயம் ஏற்பட்டால்கூட, இதோ வரிசை வரிசையாகக் கிடைத்துள்ள தீர்ப்புகள் கூறுகின்றன, இல்லை, இல்லை, வகுப்புத்துவேஷமல்ல உன் எழுத்திலே இருப்பது, நீ குற்றமற்றவன், உன் செயலிலே தவறு இல்லை என்று.

தீர்ப்புகள் தரும் உற்சாகம், புதியதோர் ஆர்வத்தைத் தருகிறது.

நமது பணியைத் திரித்துக் கூறுவோர்கள் கூவட்டும், கொக்கரிக்கட்டும், வழக்குகள் தொடரட்டும், நாம் நமது பணியினை தூயஉள்ளத்துடன், தொடர்ந்து நடத்திச் செல்வோம், நாடு தீர்ப்பளிக்கட்டும், நல்லோர் தீர்ப்பளிக்கட்டும், என்ற உறுதிகலந்த உற்சாகம் கிடைக்கிறது, நல்ல தீர்ப்பு மூலம்.

Edited, Printed, & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.